gistered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (10.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 345

# வடக்குக் கடலில் 2 டோறாக்கள் மூழ்கடிப்பு

# இருபது கடற்படையினரைக் காணவில்லை

## கடற்புலிகளின் பல படகுகளும் அழிக்கப்பட்டனவாம்
## 4 சிப்பாய்கள் கைது; மற்றொருவரின் சடலமும் புலிகளிடம்

கொழும்பு, நவம்பர் 10

வடக்குக் கடலில் விடுதலைப் புலிகளின் கடற்படை அணிக்கும் ஸ்ரீலங்கா அரசின் கடற்படை அணிக்கும் இடையில் நேற்றுமாலை இடம்பெற்ற கடற்சமரில் கடற்படையின் இரு டோறா படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இருபது கடற்படையினர் காணாமற்போயிருக்கின்றனர். கடற்புலிகளின் குறைந்தது 14 படகுகளைத் தாங்கள் தாக்கி அழித்திருக்கின்றனர் என அரச படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் தாக்கப்பட்ட படகுகளில் ஒன்று மூழ்குவதற்கு முன்னர் அதிலிருந்த கனரக ஆயுதங்கள் உட்பட அனைத்து ஆயுத தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றிக்கொண்டனர் என்றும், கடற்படைச் சிப்பாய்கள் நால்வர் உயிருடன் தங்களால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், தங்கள் வசம் உள்ள மற்றைய ஒரு சிப்பாயின் சடலத்தைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அரசுக்குத் தாங்கள் கையளிக்கவுள்ளனர் என்றும் புலிகள் நேற்றுத் தெரிவித்தனர். (08ஆம் பக்கம் பார்க்க)

## ஆனைப்பந்தியில் கிளைமோர் தாக்குதல் இரு சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், நவ.10

பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்திக்கு சமீபமாக - தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு முன்பாக நேற்று மாலை 4.15 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் மரணமானார்கள். மாணவி ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த படையினரை நோக்கி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அச்சமயம் பாதையால் சென்று கொண்டிருந்த நல்லூர் அரசடியைச் சேர்ந்த யோகராசா பானுஜா (வயது-16) என்ற மாணவி காயமடைந்தார். அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-1-203-78)

# கொழும்பில் ஐ.நா.தூதரகத்தின் முன் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.10

வாகரை அகதிமுகாம்களில் தங்கியிருந்த தமிழ் அகதிகள் மீது படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதலைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை காரியாலயத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகள் கண்டும் காணாமலும் இருக்கக்கூடாது என்றும், இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை வெறும் அறிக்கைகள் மூலம் மாத்திரம் கண்டிக்காது பாரிய அழுத்தங்களை இலங்கை அரசு மீது பிரயோகித்து இதுபோன்ற தாக்குதல்களை முற்றாக நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட (08ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சோலைக் கொடூரத்தின் கண்ணீர் காய்வதற்கு முன்னர்

# ஐயகோ! மட்டக்களப்பிலிருந்து மரண ஓலம்!!
# மனம் வெதும்புகின்றார் முதல்வர் கருணாநிதி

### இன்னும் எவ்வளவு காலம் பொறுமை காப்பது என்று தீர்மானிக்கும் வேளை வந்துவிட்டதாம்

சென்னை, நவ.10

செஞ்சோலைக் குண்டுவீச்சுக் கொடூரத்தின் கண்ணீர் காய்வதற்குள் மட்டக்களப்பிலிருந்து மரண ஓலம் எழுந்திருப்பதாக மனம் வெதும்பியிருக்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

வாகரை அகதி முகாம் மீதான கொடூர ஷெல் தாக்குதல் குறித்து நெஞ்சுருக அவர் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காப்பது என்ற நியாயமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதை இந்திய மத்திய அரசுக்குத் தாம் உணர்த்த இருக்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தின் மீது இலங்கை இராணுவம் வீசிய குண்டுத் தாக்குதலில் அநாதைச் சிறார்கள், குழந்தைகள் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய உலகத் தமிழர்களின் கண்ணீர் காய்வதற்கு முன்னால் மட்டக்களப்பிலிருந்து இந்த மரண (08ஆம் பக்கம் பார்க்க)

## மடம் வீதிச் சந்தியில் துப்பாக்கிச் சூடு சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.மடம் வீதிச் சந்தியில் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலைக்குச் சமீபமாக நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 11 ஆவது சிங்க ரெஜிமென்டைச் சேர்ந்த கோப்ரல் உதயகுமார கமகே என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவினர் மீதான தாக்குதல் மிக மோசமானது என்கிறார் சொல்ஹெய்ம்



ஒஸ்லோ, நவ.10

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் அவரது குழுவினரும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பூநகரிப் பகுதிக்கு சென்ற வேளை அப்பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் மிகவும் மோசமானதொரு சம்பவம் என்று நோர்வேயின் சர்வதேச விவகாரங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தை அடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் சொல்ஹெய்ம் தொடர்புகொண்டு (08ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி-சங்குப்பிட்டி பாதை அரசின் ஏமாற்று நாடகம்

## மாவை எம்.பி. காட்டம்

கொழும்பு, நவ.10

மூடப்பட்டிருக்கும் 'ஏ9' பாதைக் குப் பதிலாக பூநகரி ஊடான பாதையை திறப்பதற்கு அரசு எடுத்து வரும் முடிவை ஏற்க முடியாது என்றும் அப்பாதையில் பயணிப்பது மக்களுக்கு ஆபத்தானது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. (08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு நிலைமை குறித்த கருத்தறிய

# சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் படைத் தளபதி நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.10

குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்பு மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமாலை இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் நடந்த இச் சந் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




கதிரவெளியில் நடந்த தாக்குதலைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் ஐ.நா தூதரகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்திபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# 'ராடர்' மூலம் அவதானித்து கதிரவெளியில் சரியான இலக்குகளையே படைகள் தாக்கின!

## நிலைமையை அரசு இணைத் தலைமைக்கும் அறிவித்துவிட்டது என்கிறார் ரம்புக்வெல

கதிரவெளிப் பிரதேசத்திலிருந்து புலிகள் தொடர்ச்சியாக மோட்டார் குண்டுகளை ஏவினர். அவர்களின் மோட்டார் இலக்குகளை 'ராடர்' மூலம் அவதானித்துச் சரியாக இனங்கண்ட பின்னரே படையினர் மோட்டார் மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். தாக்குதல்களை அரசு நியாயப்படுத்தவில்லை. இருந்தும் கதிரவெளித் தாக்குதல் தவிர்க்க முடியாதது.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரி த்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள க் கேட்போர்கூடத்தில் நடை பெற் றது. இந்தச் செய்தியாளர் ம ாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரம்புக்வெல, ''கதிரவெள ல் நடந்த தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டதை அரசு நியாயப்படுத்தவில்லை. ஆனால், அது தவிர்க்க முடியாதது. இது தொடர்பான நிலைமைகளை இணைத் தலைமை நாடுகளுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது'' என்றும் குறிப்பிட்டார். அமைச் சர் கெஹெலிய அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''கதிரவெளிச் சம்பவம் தொடர்பாக நேற்றுக் காலை இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சமூகத்துக்கு விளக்கமளித்துள்ளோம்.

இந்தச் சம்பவத்தில் 23 பேர் கொல்லப்பட்டனர். 125 பேர் காய முற்றுள்ளனர். புலிகள் பொது மக்களை மனிதக் கேடயமாகப் பாவிக்கின்றனர். இதன் காரணமாகவே பொது மக்கள் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கொல்லப்பட்டவர்களில் புலிப் பயங்கரவாதிகளும் இருக்கலாம்.

கதிரவெளி காட்டுப் பிரதேசங்களில் இருந்து புலிகள் மஹிந்தபுர, கல்லாறு, சேருவில ஆகிய அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குக் கடந்த ஒரு வார காலமாக மோட்டார் மற்றும் ஆட்லறி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ தினமான நேற்று முன்தினம் காலை 7.15 மணி முதல் 11.15 மணி வரை படையினர் 'ராடர்' மூலமும் ஏனைய கண்காணிப்பு நிலைகளில் இருந்தும் ஒன்றுக்கு இரண்டு முறை மோட்டார் ஏவப்படும் இடத்தை உறுதியாக இனங்கண்ட பின்னரே தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தாக்குதல் காரணமாக மஹிந்தபுரவிலிருந்து 50 சத வீதமான சிங்கள மக்கள் வெளியேறி யுள்ளனர். ஏனையோர் அச்சத்துடன் வாழ்கின்றனர். மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசின் பொறுப்பும், கடமையாகும் எனவே தான், புலிகளின் மோட்டார் தளங்களை செயலிழக்கச் செய்யும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது'' - என்றார். (த-02)

# மரண அறிவித்தல்கள்

## அரசபிள்ளை மகேந்திரலிங்கம்

கோப்பாய் மத்தி, ஆஸ்பத்திரியடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு, முத்தட்டி மட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய அரசபிள்ளை மகேந்திரலிங்கம் 08.11.2006 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் மகேந்திரராணியின் அன்புக் கணவரும் டிலக்ஷன், தவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அரசபிள்ளை-கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தெய்வேந்திரலிங்கம் அனந்தேஸ்வரி, யோகேஸ்வரி, தனேஸ்வரி (பிரான்ஸ்), பாலகுமார், செல்வகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி (கோண்டாவில் மேற்கு-ஆசிரியர்)-அரியரத்தினம் தம்பதியரின் அன் மரு கனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ.தர்மராஜா. (மைத்துனர்)

## இராசம்மா சண்முகம்பிள்ளை

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வடகாடு, மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியையுமான திருமதி இராசம்மா சண்முகம்பிள்ளை (08.11.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஐயம்பிள்ளை சண்முகம்பிள்ளையின் அன்பு மனைவியும் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன், திருமதி.இராதாராணி (இந்தியா), வாணிதாசன் (ஜேர்மனி), லலிதா (லண்டன்), சந்திரவதனி (பிரான்ஸ்), கனகரத்தினம், பாரதிதாசன், சிறிரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ் சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் இராமநாதர் - இராமாசிப்பிள்ளை இராமநாதர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான Dr.கனகரத்தினம், லில்லி சின்னம்மா (ஆசிரியை), நகுலேஸ்வரி (ஆசிரியை), செல்லத்துரை, வைத்திலிங்கம், கனகம்மா மற்றும் இ.சண்முகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராசா (இந்தியா), Dr.இலங்கைரத்தினம் (U.K.), வாசுகி (நோர்வே), இராஜி (ஜேர்மனி), சேயோன் (பிரான்ஸ்), ஸ்ரீபன் (ஜேர்மனி), உமா ஆகியோரின் பாசமிகு மாமியும் ராகவன் (ஜேர்மனி), ரஜனி (இந்தியா), தாமரைச் செல்வி (கனடா), ரமணன்(கனடா), காயத்திரி (U.K.), வாசுகி (பிரான்ஸ்), தேவகி (பிரான்ஸ்), அரவிந்தன் (U.K.), வானதி (பிரான்ஸ்), மாலிபாரதி (ஜேர்மனி), கோதை (ஜேர்மனி), துளசி (ஜேர்மனி), கேசவன் (ஜேர்மனி), தீபா (U.K.), சாந்தன், தினா, இளவேனில் (நோர்வே), ஆதித்தன் (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈம. ரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வடகாடு,
மல்லாவி.
0776-309695
bharathidsan@yahoo.com

தகவல்:
பாரதிதாஸன்.
(மகன்)

(சி/51299)

# சதாம் மரண தண்டனைக்கு எதிராக கொழும்பில் இன்று கண்டனக் கூட்டம்

## அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்பர்

கொழும்பு, நவ. 10

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுஸைனுக்கு ஈராக்கிய நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தமையைக் கண்டித்து மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையிலான 'அமெரிக்க சியோனிஸியத்திற்கு எதிரான குழு' இன்று பிற்பகல் 4.30 மணிக்குக் கொழும்பு புதுக்கடைச் சந்தியில் மாபெரும் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்துகிறது.

இக்கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பி. வண அத்துரலிய ரத்னதேரர், அல் ஹாஜ் நியாஸ் மௌலவி, ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் அல் ஹாஜ் ஏ.எச். அஸ்வர், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜே.வி.பி. எம்.பி. விமல் வீரவன்ஸ, அமைச்சர்கள் அதாவுட செனிவிரட்ண, தினேஸ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப், டியூ. குணசேகர, ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், அமீர் அலி, ரிஸாத் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான என். ரவிராஜ், ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. ராஜித சேனாரட்ண, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஆர். யோகராஜன், மேலக மக்கள் முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் பிரபா கணே சன், கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜயசூரிய, முன்னாள் கொழும்பு மாநகர பிரதி மேய அஸாத் சாலி மற்றும் ஐக்கிய ுன்னணித் தொழில் சங்கத்தின் தலைவர் டபிள்யூ.எச். பியதாஸ உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு அனைவரும் வருகை தருமாறு மேல் மாகாண ஆளுநரும், இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கும் அமெரிக்க சியோனிஸத்திற்கு எதிரான குழுவின் தலைவருமான அல்ஹாஜ் அலவி மௌலான வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-07)

# கழிவு வாய்க்காலுக்கு மருந்து தெளித்தவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயம்

## நகரப் பகுதியில் நேற்றுக் கா லை சம்பவம்

ாழ்ப்பாணம், நவ.10

யாழ்.நகரப்பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக கழிவு நீர் ஓடும் வாய்க்காலுக்கு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆவரங்காலைச் சேர்ந்தவரான சி.பாஸ்கரன் (வயது- 36) என்பவரே இச்சம்பவத்தின்போது படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவரை மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தினர் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஓட்டோவில் வந்த இனந்தெரியாதவர்களே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-203-68)

### தவறிவிட்டது

இரத்தினசிங்கம் கணேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (740901168V) விசேட அடையாள அட்டை என்பன 19.10.2006 அன்று உரும்பிராயிற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் (செம்மணி வீதியில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "மின்சார சபை" அரசடி, பிறவுண் வீதி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

# யாழ்.நகரில் மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவுட்குட்பட்ட குடும்பங்களில் இதுவரை 2லீற்றர் மண்எண்ணெய் பெறாதவர்களுக்கு நாளை சனிக்கிழமை முதல் விநியோகம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

அன்றையதினம் மண்எண்ணெய் பெற்றுக் கொள்ளாவிடில் வேறு தினத்தில் அது வழங்கப்படமாட்டாது என்றும்- மண்எண்ணெய் பெறாதவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறும்- யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

எரிபொருள் நிலையங்களின் விவரமும் ஒதுக்கப்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளும் வருமாறு:

*மடத்தடி*

றெக்கிளமேசன் கிழக்கு-ஜே/68, றெக்கிளமேசன் மேற்கு- ஜே/69, குருநகர் கிழக்கு-ஜே/70, குருநகர் மேற்கு-ஜே/71, சின்னக்கடை- ஜே/72 ,யாழ்.நகர் கிழக்கு - ஜே/74,சுண்டுக்குழி தெற்கு- ஜே/75, சுண்டுக்குழி வடக்கு- ஜே/76

*மாக்பெட்*

யாழ்.நகர் மேற்கு-ஜே/73, மருதடி-ஜே/77, அத்தியடி-ஜே/78, சிறாம்பியடி-ஜே/79, பெரியகடை-ஜே/80,கோட்டை- ஜே/81, வண்ணார்பண்ணை-ஜே/82, கொட்டடி- ஜே/83.

* * *

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். ஐயனார் கோவில் வீதியில் உள்ள மண்எண்ணெய் எரிபொருள் நிலையத்தில் இன்று நவம்பர் மாதத்திற்கான மண்ணெண்ணெய் விநியோகம் இடம் பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு பங்கீட்டு அட்டைகளுக்கு 2 லீற்றர் வீதம் மண்எண்ணெய் இந்த நிலையத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

# பருத்தித்துறையில் மீனவர் சங்கத் தலைவர் நேற்று சுட்டுக்கொலை

நெல்லியடி, நவ. 10

பருத்தித்துறை, இரண்டாம் குறுக்குத் தெருவில் வைத்து நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இனந்தெரியாதவர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் சங்கத்தலைவரும், வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாச முன்னாள் பொருளாளருமான ஆறுமுகம் விக்னராஜா (வயது 50) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

பருத்தித்துறை கொட்டடியைச் சொந்த இடமாகக் கொண்ட 11 பிள்ளைகளின் தந்தையான இவர் இரண்டாம் குறுக்குத் தெரு வீதியூடாக சென்று கொண்டிருந்த வேளை, இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-70-15-203-115-173)

A/L புவியியல்
07 - மாதிடப் புவியியல்
08 - படவேலை (Map.)
சுற்றாடல் புவியியல்
Mr.Reegan
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் **ம.வைத்தீஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை மயில்வாகனம்**

அவர்கள் சிவபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

பிரதேச செயலரும்,
சகல நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும்.
நலன்புரிச்சங்கம்.

(55105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பல்கலைக்கழக

# கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## துணைவேந்தரிடம் கோர மாணவர் ஒன்றியம் முடிவு

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தரிடம் கோரும் தீர்மானம் ஒன்றைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்கால கல்விச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கைலாசபதி கலையரங்கில் மாணவர் ஒன்றியத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினர் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகக் கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளைப் பதில் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், துறைசார் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் உடன் முன்னெடுக்க வேண்டும்.

வெளிமாவட்ட மாணவர்கள் சமுகமளிக்கக் கூடியதான நடவடிக்கைகள், உணவு, பாதுகாப்பு, தங்குமிடம், சுகாதாரம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

எமது கோரிக்கைகளுக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் துணைவேந்தரிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கின்றோம்.

பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது குறித்து டிசெம்பர் முதலாம் திகதிக்கும் 8ஆம் திகதிக்கும் இடையில் அறிவிக்கப்பட வேண்டும்.

சமூகப் பெரியார்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது குறித்து கொடுத்த அழுத்தம் போதுமானதல்ல. பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை உடன் ஆரம்பிக்கக் கூடியதாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினர் ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 30 வீதமான மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குச் சமுகமளிக்கமுடியாத நிலையில் இங்குள்ள 70 வீதமான மாணவர்களும் தமது கல்வியத் தொடர முன்வரமாட்டார்கள். பாதை திறக்கப்படும் பட்சத்திலேயே வெளிமாவட்ட மாணவர்கள் வரக்கூடியதாக இருக்கும்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உணவு உதவிகளை வழங்க அரச அதிபர் முன்வரவேண்டும்.

சகல மாணவர்களிடமும் அச்ச நிலை காணப்படுகின்றது.

சிங்கள,முஸ்லிம் மாணவர்கள் பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக யாழ்.பல்கலைக் கழகத்துக்கு வரமுடியாதுள்ளது எனக் கூறப்படுகின்றது. அமைச்சர் சந்திரசேகரன் முஸ்லிம் மற்றும் மலையக மாணவர்களை இடமாற்றவேண்டும் எனக் கோருகிறார். தமிழ் மாணவர்களின் பாதுகாப்புக்கு மட்டும் உத்தரவாதமில்லை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்துக் கவலைப்படுவதில்லை.

மீண்டும் ஒரு பொதுக்கூட்டம் இம்மாதம் 20ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

கற்றல் செயற்பாடுகள் குறிப்பிட்ட தினத்துக்குள் ஆரம்பிக்கப்படாவிட்டால் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்படும் - என்றனர். (202-68-79-111)

## கந்தபுராணப் படிப்பு

வலி.தென்மேற்கு,நவ.7

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது.

தினமும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இப்புராணப் படிப்புக்கு சைவ சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் பயன் சொல்லி வருகின்றார். இப்புராணப்படிப்பு இங்கு வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. அடுத்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி வரை இப்புராணப் படிப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(203-13 5)

## மானிப்பாயில் திருவாசகப் போட்டி

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் திருவாசக முற்றோதல் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தரம் 1தொடக்கம் 3வரையான மாணவர்களுக்கு தேவாரம், புராணம் என்பனவும் -

தரம் 4தொடக்கம் 6வரையான மாணவர்களுக்கு பஞ்சபுராணம் முற்றோதலும் -

தரம் 7, 8 மாணவர்களுக்கு சிவபுராணம் ஓதுதலும் தரம் 9இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு திருவெம்பாவை ஓதுதலும் போட்டிகளாக நடைபெறும். (202-90)

## ஆனைக்கோட்டையில் பயன்தரு மரங்கள் அழிப்பு

நவாலி,நவ.10

ஆனைக்கோட்டை,நவாலி பகுதியில் அனுமதியின்றி பயன்தரு மரங்கள் விறகுக்காக வெட்டி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து சிலர் பயன்தரு மரங்களை வெட்டி பணத்திற்காக விற்று வருகின்றனர்.

இதேவேளை -

ஆள்கள் குடியில்லாத வீடுகளின் எல்லைகளில் நீண்டகாலமாக நிற்கும் பாரிய எல்லைப் பூவரசு மரங்கள் மற்றும் காணிகளில் நிற்கும் பனை மரங்கள் என்பன வற்றையும் விஷமிகள் தறித்து எடுத்துச்சென்று விற்று வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (203-100)

சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதியில்

# விஷமிகள் மின் கம்பிகளை வெட்டியதால் மூன்று நாள்கள் மின்விநியோகம் தடை!

சங்கானை,நவ.10

சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் விஷமிகளால் மின்சாரக் கம்பிகள் வெட்டப்பட்டமையால் மூன்று நாள்கள் மின் விநியோகம் தடைப்பட்டதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சங்கானை, ஓடக்கரை வீதியில் வயல் வெளியூடாகச் செல்லும் சுமார் 100 மீற்றர் மின்கம்பிகளையே விஷமிகள் வெட்டி எடுத்துள்ளனர்.

இதன் காரணமாக காரைநகர் முதல் வேலணை வரையான பிரதேசங்களிலும் சுன்னாகம் பிரதேசத்திற்குட்பட்ட பல இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டுக் காணப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் செவ்வாய்க்கிழமை வரை மின்விநியோகம் தடைப்பட்டதாக மக்கள் கூறினர்.

சனிக்கிழமை இரவு 10 மணிவரை மின் விநியோகம் இருந்தாகவும் அதன் பின்னரே விஷமிகள் இந்த வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் சித்திதன்கேணி மின்சார சபையினரால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-29)

# வருமானமின்றி கஷ்டமுறும் குடும்பங்களுக்கு உலர் உணவு பெறுவதற்கு 'கியூடெக்' பண உதவி

நல்லூர்,நவ.10

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக வருமானமின்றிக் கஷ்டமடையும் குடும்பத்தினர் உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான பண உதவியைக் 'கியூடெக்' நிறுவனம் வழங்கியுள்ளது.

தற்போதைய சூழ்நிலைகாரணமாக ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாடு, வருமானமின்மை, பொருள்களின் விலையுயர்வு போன்றவற்றால் மக்கள் பெரும் அவலம் அடைந்துள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு யாழ்.அரச அதிபர் கே.கணேஸின் வேண்டுகோளை அடுத்து யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள 4ஆயிரத்து 92 குடும்பங்களுக்கு 3.9 மில்லியன் ரூபா நிதியை 'கியூடெக்' வழங்கியுள்ளது.

இந்நிதி மூலம் அவர்கள் இரண்டு மாதத்திற்குத் தேவையான அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். (203-11)



யாழ்.பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளுக்கு 'கியூடெக்' நிறுவனத்தின உதவியுடன் உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்பட்டபோது எடுத்த படம் (படம் : லக்ஸ்மன்)

# சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு

கல்வியங்காடு,நவ.10

குடாநாட்டில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள் பெரும் தட்டுப்பாடாக உள்ளன.

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையை அடுத்து பல பொருள்களுக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சைக்கிள்களுக்கான ரயர், ரியூப் 800 ரூபாவாக விற்கப்படுகின்றன. ஏனைய உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்வது பெரும் சிரமமாக உள்ளதாகவும் -

கையிருப்பில் உள்ள பொருள்களையும் மிகவும் விலை உயர்த்தி விற்பதாகவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

மோட்டார் சைக்கிள்களுக்கு வேண்டிய 'பிளக்' வகைகளும் தட்டுப்பாடாக உள்ளன எனவும் - சில கடைகளில் ஒரு பிளக் 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய உதிரிப்பாகங்களும் கிடைப்பது அரிதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-79)

# எள் இறக்குமதி தடைப்பட்டதால் நல்லெண்ணெய் உற்பத்தி நிறுத்தம்

நவாலி,நவ.10

குடாநாட்டில் எள்ளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து ஆனைக்கோட்டையில் இயங்கிவரும் பல நல்லெண்ணெய் கடைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லெண்ணெய் வடிப்பதற்குத் தேவையான எள் மாகோவிலிருந்தே குடாநாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. ற்போது குடாநாட்டுக்கான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளதால் எள் இறக்குமதி செய்வதற்கு வசதி இல்லை. இதனால் நல்லெண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்புப் போன்ற இடங்களில் உள்ள சில நல்லெண்ணெய் ஆலைகள் மூடப்பட்டுள்ளதுடன் பல ஆலைகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் அந்த ஆலைகளில் பணியாற்றிய பலர் வேலைவாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (202-100-135)

மாநகர சபை அறிமுகம் செய்த

# குப்பைத் தொட்டித் திட்டம் வெற்றியைத் தரவில்லை

## ஆணையாளர் கவலை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கழிவகற்றலை இலகுபடுத்துவதற்காக அறிமுகப் படுத்தப்பட்ட குப்பைத் தொட்டித் திட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

அண்மையில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகள், பொதுஇடங்கள், நிறுவனங்கள் என்பவற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட குப்பைத் தொட்டி திட்டம் பல்வேறுபட்ட காரணங்களால் எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை ; வெற்றியளிக்கவில்லை.

வீதிகளில் வைக்கப்பட்டிருந்த தொட்டிகளில் சில பாதுகாப்புக் காரணங்களுக்காக அகற்றப்பட்டுள்ளன. மேலும் பல தொட்டிகள் விஷமச் செயல்களில் ஈடுபடுபவர்களால் தலை கீழாகப் புரட்டி விடப்படுகின்றன. அத்துடன், பெட்டிகள் களவாடப்பட்டும் வருகின்றன.

பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். பாதுகாப்பு நிலை சீரடைந்த பின்பே இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும் என்றார்.

இந்தத் தொட்டிகளை பாடசாலைகளின் தேவைக்குப் பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-88)

# அப்பியாசக் கொப்பிகளுக்கும் குடாநாட்டில் தட்டுப்பாடு

தென்மராட்சி,நவ.10

பாடசாலை மாணவர்களுக்குரிய அப்பியாசக் கொப்பிகளுக்கும் குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியில் அப்பியாசக் கொப்பிகள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் ஒரு மாணவருக்கு ஓர் அப்பியாசக் கொப்பி வழங்கப் படுவதாகவும் இதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை - தென்மராட்சி பிரதேசத்தில் நிலவிரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்குமாறு அரசசார்பற்ற நிறுவனங்களை தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் கோரியுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் வருட கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 25 - 12 - 1953



மறைவு 10 - 11 - 2004

காலஞ்சென்ற நடராஜா - அன்னபாக்கியம் தம்பதியரின் அருமைப் புதல்வி

### திருமதி கமலினி குகதாசன்

தாயைப் போல் அன்பு காட்டி ஆறுதல்
தந்து அரவணைத்த என் அன்பு அக்காவே!
நீங்கள் எமைவிட்டு மறைந்து இரண்டு
வருடங்களாகி விட்டனவே
நீங்கள் தந்த நிழலின்றி தனியாகி விட்டோம்
எக்காலம் சென்றாலும் எம் நினைவுகளில்
என்றும் அழியாமல் வாழ்ந்து கொண்டே
இருப்பீர்கள் எங்கள் ஆசை அக்காவே.

(55100)

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை அம்பாளை வேண்டி நிற்கும்

உங்கள் அன்பு மறவாத லிபியாவில் இருந்து கண்ணீருடன் உங்கள் தம்பி மற்றும் மச்சாள், பிள்ளைகள், அக்கா குடும்பத்தினர், தம்பி குடும்பத்தினர், தங்கை வசந்தி, ஜேர்மனியில் இருந்து தங்கை சுபி குடும்பத்தினர்.

ந.சாந்தகுமார்,
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 28 - 06 - 1984



அம்பாள் அடியில் 14 - 08 - 2006

### அமரர் வேலாயுதம் கிருபாகரன் (சிவா)

(யாழ். மாவட்டத்தின் சிறந்த விவசாயியாக தெரிவு செய்யப்பட்டவர்)
திதி:11.11.2006

சிவா சிவா என்று செல்லமாய் நாமழைக்க
எங்கு சென்றனையோ எமைத் தவிக்கவிட்டு
திங்களாய் உன்முகம் எங்கும் தெரியுதே
தொண்ணூறு தினம்சென்றாலும் ஆறுமோ எம்துயரம்
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

இவரது ஆத்மா கொட்டியை அம்மன் திருவடியில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். நாளை (11.11.2006) சனி அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோயிலடி,
கொட்டிடை, ப நகவில். (55107) குடும்பத்தினர்.

## இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், நவ.10

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் கொற்றாவத்தை ஆரம்ப சுகாதார நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் பொதுமருத்துவ சேவை, நீரிழிவு நோய்க்கான பரிசோதனை என்பன நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

(203)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை துரைச்சாமி

(முன்னாள் லிகிதர் - நானாட்டான் பிரதேச செயலகம், மன்னார்.)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் முன்வீதி, செருக்கம்புலம் ஒழுங்கை, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை துரைச்சாமி நேற்று (09.11.2006) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பெரியதங்கச்சியின் மூத்த புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் வள்ளியம்மையின் அன்பு மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், மனோன்மணி, சகுந்தலாதேவி, சிவகுமார், சிவராசா, சிவபாலன், சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மபாலன், மகேந்திரன், ஜெயா, திருவருட்செல்வி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், சுப்பிரமணியம், தியாகராசா, பூரணம், அன்னம்மா, புவனேஸ்வரி, சபாரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, முருகேசு மற்றும் சின்னம்மா, முத்துக்குமாரு, செல்லையா மற்றும் காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், செல்லையா, தனலட்சுமி மற்றும் சிவயோகம், தெய்வானை, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சிவகுமார், கல்பனா, மதுமதி, ஜெயப்பிரதாப், மயூரன், மயூரி, சர்மிலா, சாயித்தியன், சாயித்தியா சாதுரியா, வாகீசன், சுதேசன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

செருக்கம்புலம் ஒழுங்கை,
நந்தாவில்,
கொக்குவில். (550103)

தகவல்:
செ.தர்மபாலன்,
(மருமகன்).

### கந்தையா இலட்சுமணர்



கரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இலட்சுமணர் நேற்று (09.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- சின்னம்மா தம்பதியரின் மகனும் கந்தையா - பர்வதம் தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, இராசம்மா, நடராசா, பூபாலராசா, இராமர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகநாதன், அருளானந்தம் (லண்டன்), குயிலவநாதன் (இத்தாலி), சிறிகாந்தன் (லண்டன்), அசோகன் (இத்தாலி), கமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதாதேவி, பாக்கியலக்சுமி, ரஜனி, அனுரா, சரோஜினிதேவி, தயாவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சதீஸ், சபேஸ், தட்சாயினி, பிரசன்னா, பிரசாந், கஜன், விதுசனி, கீர்த்தனா, அனுஷன், அபினாஸ், அபிராம், விந்துஜன், யானுஷா ஆகியோரின் பேரனும் சரஸ்வதி, கோமதி, காலஞ்சென்ற குமாரசாமி, சந்திரசேகரம் தேவிசிகாமணி, யோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்,
நீர்வேலி. (55708)

தகவல்:
குடும்பத்தினர்.

## வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - 2007

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2007 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 10.11.2006 - 17.11.2006 பி.ப. 2 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 24.11.2006 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 24.11.2006 பி.ப. ஒரு மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப் பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)
கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை 'செயலாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, தலைமையலுவலகம் புத்தூர்' என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி(ரெலிக்கொம் அருகில்)யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 24.11.2006 நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல. வேலையின் பெயர் | கேள்விப் பத்திரப்பணம் வற் நீங்கலாக | மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உபஅலுவலகம்** | | | |
| 01. அச்சுவேலி பொதுச் சந்தை(துவிச் சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 800000.00 |
| 02.வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 15500.00 |
| 03.அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 168000.00 |
| 04.அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 16000.00 |
| 05.அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 30500.00 |
| 06.அச்சுவேலி சந்தை சுற்றாடல் வாகனத் தரிப்பு நிலையம் | 250.00 | 500.00 | 42000.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 01.கோப்பாய் வடக்கு பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 16200.00 |
| 02.இருபாலை பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 15200.00 |
| 03.கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 52500.00 |
| 04.இருபாலை சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 105000.00 |
| 05.இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 10500.00 |
| 06.கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 2100.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 01.உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 136500.00 |
| 02.ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 61700.00 |
| 03.உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 78750.00 |
| 04.ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 12100.00 |
| 05.உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 90000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 01.புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 99750.00 |
| 02.புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 500.00 | 33600.00 |
| 03.புத்தூர் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6800.00 |
| 04.ஆவரங்கால் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 9100.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 01. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 36850.00 |
| 02.நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6600.00 |
| 03.நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 3750.00 |
| 04. நீர்வேலி பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 6600.00 |

குறிப்பு:
1.சந்தையிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றாடலில் மீன்,மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
2.கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புவோர் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ்,கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.
3.கேள்விப் பத்திரப்பணம் சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போதுள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.
4.இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபை யிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5.மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர்
08.11.2006 (சி-51298)

[illegible]
செயலாளர்.

## மருத்துவ தாதி நியமனம்

நாவலி, நவ.10

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் பல வருடங்களின் பின்னர் மருத்துவ தாதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் பலகாலமாக விடுத்து வந்த கோரிக்கையையேற்று யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இந்த நியமனம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இந்த நியமனம் இப்பகுதி மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(203-100)

## மரண அறிவித்தல்கள்

### சீவரத்தினம் சிவஞானரத்தினம்

(சிறாப்பர்-Railway Department)



இளவாலை, தும்மலையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் சிவஞானரத்தினம் (சிறாப்பர் - Railway Department) 09.11.2006 அன்றுகாலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார் (பிரான்ஸ்), காலஞ் சென்ற ரவிக்குமார், சிவஜோதி (பிரான்ஸ்), ஞானஜோதி (பிரான்ஸ்), சுவேஸ்வரி (டென்மார்க்), ஆனந் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஞானகலா, சுகந்தினி, சுதர் சினி,கருநேந்திரன், ஆனந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும் அகிலா, அபிரா, அர்ச்சனா, சுஜிர்தன், சொசியன், சரிகா, மகேஷ், சுவேதா, சுஜிர்த்தா, அஜிந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2006)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (55104)

தகவல்:
மனைவி.

### சின்னத்தம்பி அப்பையா

(பிரபல புகையிலை வியாபாரி)

கொக்குவில் மஞ்சவனப்பதியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்பையா 09.11.2006 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் சோதிலிங்கம் (அபிராமி பெஷன் ஹவுஸ், சுன்னாகம்), புஸ்பலிங்கம்(கனடா), சண்முகலிங்கம்(இத்தாலி), கணேசலிங்கம்(சுவிஸ்), இந்திராணி(இந்தியா), புஸ்பராணி, யோகராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணாம்பாள், சிவமலர், ஒபிலியா, ரஜனி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

காரைக்கால்,
[illegible]. (55108)

தகவல்: பிள்ளைகள்,
[illegible]மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் பரவும் முறைகளும் அவைகளைத் தடுப்பதற்கான வழிகளும்

**எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்புவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

**அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

### டெங்கு நோய் பற்றிய சிறு அறிமுகம்

01) நோய்க்காரணி - வைரஸ்

02) நோய்க்காவி - நுளம்பு

03) இந்நோயைப் பரப்பும் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் - சுத்தமான நீரைக் கொண்ட சிறிய நீர்கொள்கலன்கள் (சிரட்டைகள், இளநீர், கோம்பைகள், தகரப் பேணிகள், பொலித்தீன் பைகள்,பழைய ரயர்கள், பூச்சாடிகள்,மீன்தொட்டிகள், அடைப்படைந்த தண்ணீர்ப் பீலிகள், வெடித்த மலகூட குழிகள்)

04) நோய்த்தடுப்பு நடவடிக்கைகள்

நுளம்பு உற்பத்தியாகும் சிறிய நீர் கொள்கலன்களை அழிப்பது(எரிப்பது/ புதைப்பது)

- தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களைத் துப்புரவு செய்தல்

டெங்குநோய் தடுப்பு நடவடிக்கைகளை முழு வீச்சில் முன்னெடுப்பதற்காகவும் ஒருங்கிணைப்பதற்காகவும் 13.11.2006 முதல் 19.11.2006 வரையிலான வாரம் யாழ். மாவட்டத்தில் டெங்கு தடுப்பு வாரமாக பிரகனப்படுத்தப்படுகிறது.

### டெங்கு தடுப்பு வாரத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள்

01) சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் சுத்திகரிப்பு பணி இடம்பெறவேண்டும். தேவையேற்படின் சிரமதானங்கள் ஏற்பாடு செய்ய லாம். *(பொறுப்பு - வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள்)*

02) சகல திணைக்கள/நிறுவன வளவுகளிலும் சிரமதான அடிப்படையில் சுத்திரிகரிப்பு பணி இடம்பெறவேண்டும்.

*(பொறுப்பு -திணைக்கள/ நிறுவன தலைவர்கள்)*

03) பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும், தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்புரவு செய்யவேண்டும். *(பொறுப்பு - உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)*

04) திண்மக் கழிவுகள் கிரமமாக உரிய முறையில் அகற்றப்படவேண்டும்.

*(பொறுப்பு - உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)*

05) பாடசாலைகளில் சிரமதான அடிப்படையில் சுத்திரிகரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும். *(பொறுப்பு - பாடசாலை அதிபர்கள்)*

06) ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்படவேண்டும்.*(பொறுப்பு - வீட்டு உரிமையாளர்கள்/குடியிருப்பாளர்கள்)*

07) மேற்படி சுத்திகரிப்பு பணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்பார்வை செய்வர் *(பொறுப்பு - சுகாதார வைத்திய அதிகாரிகள்)*

8) டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு சுகாதார வைத்திய அதிகாரிகள் / பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும். பாடசாலைகளில் காலை ஒன்றுகூடலில் இதற்காக நேரம் ஒதுக்கப்படவேண்டும். *(பொறுப்பு - சுகாதார வைத்திய அதிகாரிகள் / பொது சுகாதார பரிசோதகர்கள்/பாடசாலை அதிபர்கள்)*

09) சகல வைத்தியசாலைகளிலும் நோயாளரை நுளம்புகடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலைகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும். *(பொறுப்பு - வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)*

10. இவ்வாரத்தில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்/துண்டுப்பிரசுரங்கள் / கட்டுரைகள் *(பொறுப்பு உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அரசசார்பற் நிறுவனங்கள்)*

11) பொது சுகாதார பரிசோதகர்கள்/குடும்ப நல மருத்துவ மாதுகள் தமது பிரிவிலுள்ள வீடுகளுக்கு வீட்டுத் தரிசிப்பிற்குச் செல்லும்போது நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி அழிக்க ஆலோசனை வழங்கவேண்டும். *(பொறுப்பு - பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல மருத்துவ மாதுக்கள்)*

12) யாழ்.மாவட்டத்திலுள்ள சகல நலன்புரி நிலையங்களிலும் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். *(பொறுப்பு - சுகாதார வைத்திய அதிகாரிகள், நலன்புரி நிலைய பொறுப்பதிகாரிகள் )*

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயை தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியம்

*"வந்தபின் தவிப்பதை விட வரு முன் காப்போம்"*

**வைத்திய கலாநிதி**
**ஆ.கேதீஸ்வரன்**
**மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் , யாழ்ப்பாணம்.**

## 200 ரூபாவுக்கு விற்பனையாகும் ஒரு சோடி பற்றறி

கல்வியங்காடு,நவ.10

குடாநாட்டில் ஒருசோடி பெரிய பற்றறி 200 ரூபாவுக்கு அதிகமாக விற்கப்படுகின்றது.

பற்றறி வகைகளுக்குக் குடாநாட்டில் ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து யாழ்.நகர நடைபாதைக் கடைகளில் அதிகரித்த விலையில் பற்றறிகள் விற்கப்படுகின்றன.

ஒருசோடி சிறிய பற்றறி 100ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

மின்சார விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பற்றறிகளின் தேவையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் அதிகரித்த விலையில் விற்கப்படுவதால் நுகர்வோர் அதனை வாங்கமுடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர். (202-79)

## பொக்கனைகுளம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, நவ.10

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாதகல் பொக்கனை குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்து 69 மனித வலுவைக்கொண்டு இக்குளம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். (202-135)

## நெடுந்தீவில் மீனவக் குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம்

நெடுந்தீவு மத்தி துண்காலைப் பகுதி மீனவக் குடும்பங் களுக்கென குடியிருப்புத் திட்டம்

நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபரின் வழிகாட்டலில் இந்தக் குடியிருப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 47 குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன. (202-111)

## வீதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கும் வேலைகள் மும்மரம்

### மாநகர ஆணையாளர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட தண்ணீர் தேங்கும் வீதிகளின் இரு பகுதிகளிலும் மண்படிவுகள் மட்டுப்படுத்தப்பட்டு நீர் வழிந்தோடக்கூடியதாக அமைக்கும் வேலைகளில் நகரசபைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகவலை யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான வடிகால்கள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றின் கரையோரங்களைத் திருத்தியமைக்கும் கட்டுமான வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நகரத்தின் பிரதான குளங்களான புல்லுக்குளம், ஆரியகுளம் என்பவற்றை ஆழமாக்கும் வேலைகளும் கரையோரங்களில் சிமெந்து தடுப்புக்கள் அமைக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றை இந்தமாத முடிவுக்குள் நிறைவேற்றியாக வேண்டும். ஏனெனில் சேறு அள்ளும் இயந்திரங்களை மாதமுடிவுக்குள் 'நொறாட்' ஸ்தாபனத்திடம் திரும்பி கையளிக்கவேண்டும்.

இதனால் நீண்டகாலமாக சேறு அகற்றப்படாத புல்லுக்குளத்தின் வண்டல் படிவுகளை முழுதாக அகற்ற இயலாதிருக்கும். ஆரிய குளத்தின் தூர் முற்றாக வாரி எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அயற்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மழைவெள்ளம் தேங்குவது தவிர்க்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பொருள்களின் தட்டுப்பாட்டால் செங்குந்தா சந்தை வேலைகள் தடைப்பட்டுள்ளது.

பொதுவாக தண்ணீர் தேங்கும் வீதிகளின் இரு பகுதிகளிலும் மண்படிவுகள் மட்டுப்படுத்தப்பட்டு நீர் வடிந்தோடக்கூடியதாக அமைக்கும் செய்முறையில் நகரசபை தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். (202-88)


**தவறிவிட்டது**

கனலிங்கம் விஜிகரன் என்பவருடைய தே.அ. அட்டை (823645074 V) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.432/2,மடம் வீதி,யாழ்ப்பாணம் எனும்முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**D.V 2008 விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு**

இன்னும் சில நாள்கள் மட்டுமே!

55000 பேர் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்காதோர் பாஸ்போட் அளவு கலர் புகைப்படத்துடன் உடன் தெடர்பு கொள்ளவும்.

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்துக்கான உறுதிப் பற்றுச்சீட்டினையும் உடன் பெற்றுக்கொள்ள லாம்.

விண்ணப்பக்கட்டணம் 200ரூபா மட்டுமே.

**உங்களிடம் தொலைபேசி வசதி உள்ளதா?**

குறைந்த கட்டணத்தில் IDD அழைப்புகளை மேற்கொள்ள விசேட சலுகைகள்.

கனடா,அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு:5ரூபா.

இந்தியாவுக்கு:22ரூபா.

ஐக்கிய அரபு நாடுகளுக்கு....

**திருமுருகன் கொம் நெற்**
**259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 222 7835**
**46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**
**தொ.பே. 222 7310**


## உயர்தர மாணவர்களுக்கு இரசாயனவியல் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.10

இலங்கை இரசாயனவியல் கழகத்தினால் அகில இலங்கை ரீதியாக ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்காக நடத்தப்படும் இரசாயனவியல் வினாவிடைப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்து நடைபெற உள்ளதாக யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளூடாக விண்ணப்பித்த மாணவர்கள் அதிபரினால் பெயர்குறித்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களுடன் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர் கேட்டுள்ளார். (202-88)


**IIS**

**COMPUTER COURSES**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**பிரிவு I : 15.11.2006**
**பிரிவு II : 18.11.2006** } **பகல் 10.00 மணி**

**புலமைப்பரிசில் 2006 இனைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான இறுதிப் பிரிவு இதுவாகும்.**

**பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்**

**Director IIS**
**# 100, Clock Tower Road, Jaffna.**
**Tel : 021 222 2831**


சுகாதார திணைக்களத்தின்

## போசாக்கு மேம்பாட்டுத் திட்டம் இன்று முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.மாவட்டச் சுகாதாரத் திணைக்களத்தின் குறுகிய கால போசாக்குத் திட்டம் இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் உயர் புரதமுள்ள போசாக்கு பிஸ்கட்டுக்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வாரமும் கிரமமாக பிஸ்கட்டுக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (202)

## பஸ்சேவை இடைநிறுத்தம் அரச அலுவலர்கள் சிரமம்

தென்மராட்சி,நவ.10

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு காலை 7.30 மணிக்கு நடத்தப்பட்ட 765 ஆம் இலக்க பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் தென்மராட்சிப் பிரதேச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி உத்தியோகத்தர்களின் நன்மை கருதி 7.30 மணிக்கு குறிப்பிட்ட பஸ் சேவை நடத்தப்பட்டது. இச்சேவை இடைநிறுத்தப்பட்டதால் பருத்தித்துறையிலிருந்து காலை 6.45 மணிக்குப் புறப்படும் பாடசாலை பஸ் சேவையிலேயே உத்தியோகத்தர்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

உத்தியோகத்தர்களின் நலக்கருதி மீண்டும் காலை 7.30 மணி சேவையை ஆரம்பிக்குமாறு அலுவலகர்கள் பருத்தித்துறைச் சாலை முகாமையாளரைக் கோரியுள்ளனர். (202)


**விற்பனைக்கு**

7.5 **Kw** லிஸ்ரர் ஜெனரேற்றர்,**Honda EP 2500** ஜெனறேற்ரரும்,றொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு.

**மூர்த்தி**
**63/18,சிவன் வீதி,பரவைக்குளம்,**
**திருநெல்வேலி.**



*சிவமயம்*

**திருமண அழைப்பு**

**நிகழும் மங்களகரமான விய வருடம் ஐப்பசி மாதம் 26ஆம் நாள் (12.11.2006) ஞாயிற்றுக் கிழமை 7.00 மணிமுதல் 8.30 மணி வரையுள்ள சுபவேளையில்**

**திரு.திருமதி தயானந்தசோதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் திருவளர் செல்வன்**

**கிருபாகரன்**

**அவர்களுக்கும்**

**திரு.திருமதி பாலசிங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரி திருவளர் செல்வி**

**பவதாரணி**

**அவர்களுக்கும்**

**இறைவன் திருவருள் துணைகொண்டு திருநெல்வேலி "பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் திருக்கல்யாண மண்டபத்தில்" திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி தயானந்தசோதி குடும்பத்தினர்,
"இந்திரபதி"
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

திரு.திருமதி பாலசிங்கம் குடும்பத்தினர்,
இல : 83/15, பலாலி வீதி,
திருநெல்வேலி.

*(இரு வீட்டார் அழைப்பு)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 08.11.2006 புதன்கிழமை நடைபெற்ற இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மூன்றாவது பட்டமளிப்பு வைபவத்தில் யாழ். தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பயின்று **National Diploma in English** பட்டம் பெற்ற பிறவுண் வீதியைச் சேர்ந்த

### ஸ்ரீகலா பஞ்சாட்சரஐயர் (B.Com.)

அவர்களை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று, பதவியுயர்வு பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். (55073) **நண்பிகள்.**

## றெறாசோ மாபிள் பதித்தல்

மேலைத்தேய நவீன தொழில் நுணுக்கங்களுடன்
வடகீழ் மாகாண
ஆரம்பகால தொழில் விற்பன்னர்
**தேவையான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.**
(தேவை ஏற்படின் மின்சார வசதி செய்யப்படும்)
**'மாபிள்ஸ்'**
கண்டாமை, தொல்புரம். தொ.பே 222 5286, 222 6729
(54899)

## அறிவித்தல்

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீகந்தசாமி கோயிலுக்கு 15.04.2006 தொடக்கம் புதிய பரிபாலனசபை பொறுப்பேற்றுள்ளது. வழிபடுவோர் அனைவரும் தங்கள் கொடுக்கல் வாங்கல்களை புது நிர்வாகத்தின் பொருளாளர் சி.குகனேசனுடன் செய்து கொள்ளவும்.

கோயிலின் வங்கிக் கணக்கிலும் வைப்புச் செய்யலாம்.

**வங்கிக் கணக்கு இலக்கம் : 13214**
**மக்கள் வங்கி,**
**சங்கானை.**

(55072)

சி.வேலும்மயிலும்,
செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் முன்னாள் மணியகாரன் ல.கைலாயப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி

### பறுவதம்

இறைபதம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாமுண்டாதேவி சமேத ஞானவைரப் பெருமான் அருள் புரிவாராக.

பரிபாலனசபை,
கோண்டாவில். ஸ்ரீசாமுண்டாதேவி சமேத ஞான வைரவ ஆலயம்.
(54062)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி மரிய றோசாறியோ அவர்களின் அன்புச் சகோதரி

### திருமதி ஜேம்ஸ் யோகவதி றீற்றா

மன்னார், ஆண்டான்குளத்தில் செவ்வாய்க்கிழமை 07.11.2006 காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர்,ஆசிரியர்கள்,
அச்சுவேலி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(55095) யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி,

## [illegible]ராண்டு நினைவலைகள்

மண்ணில் 19 - 09 - 1929



விண்ணில் 02 - 11 - 2004

### அமரர் குமாரசாமி அருளானந்தம்

(Retired District and Magistrate Courts Registrar, J.P.)
திதி : 10.11.2006

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
தங்கள் முகம் மறையவில்லை
எங்கள் உயிர் உள்ளவரை
ஏந்தலே உங்கள் நினைவழியாது.

(55020)

61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

யாழ். - கொழும்பு விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகிறது.

தொடர்பு: 0785788811 - 0785325501
0114964994 - Fax: 0112721789

## 2007 இல் தரம் - 05

புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் பயிற்சி வகுப்பு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தரம் 03, 04 இல் அனுமதி பெற விரும்புவோர் உடன் பதிவு செய்யவும்.

தரம் 06 முதல் O/L வரை புதிய அனுமதி கள் நவம்பர் 22 முதல் வழங்கப்படும்.

-அதிபர்.

**The Express Institute**
Irupalai, Kopay.

---

குத்தகைக்கும் விற்பனைக்கும்
யாழ்ப்பாணத்தில் 20 வருடங்களுக்கு மேல் இயங்கி வந்த மருந்து விற்பனை ஸ்தாபனம் கைமாற்றிக் கொடுக்கப்படும். மருந்துப் பொருள்களும் மொத்தமாக விற்கப்படும். வீட்டுத் தளபாடங்கள், LML ஸ்கூட்டர், ரீ.வீ., பிறிச் என்பனவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 7892

## Every Module Only for 1000/=

காலத்திற்கேற்ற வகையில் அனைத்து கணனி பாடநெறிகளும் தனித்தனி சான்றிதழ் பாடநெறிகளாக....

- OS & PC Application (10hrs.)
- MS Word (10hrs.)
- MS Exel (10hrs.)
- MS Access (10hrs.)
- MS Power Point (10hrs.)
- Internet & E-mail (10hrs.)
- Flash MX (10hrs.)
- Adobe Photo Shop (10hrs.)
- Adobe Pagemaker (10hrs.)
- HTML (10hrs.)
- Java Script (10hrs.)
- CSS (10hrs.)
- Dream weaver & Front Page (10hrs..)
- PHP (10hrs.)
- MY SQL (10hrs.)

டிப்ளோமா பாடநெறிகளும் குறுகிய காலத்தில் ...

- # Visual Basic (40hrs) for 4000/-
- # Computer Hardware (15hrs) for 1500/-
- # Wep Designing, MS Office, DTP
- # Mathematics for Computing,ICT for O/L

**அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்க விண்ணப்பம் ஒன்றுக்கு 50 ரூபா மட்டுமே!**

- # Domain Reg.Only 1000 per year
- # Web Hosting from 2000 per year
- # Web Designing from 5000

குறைந்த செலவில் கொம்பியூட்டர் புறோகிறாம்களை வடிவமைத்து பெற..

## SPEED IT NET

72/28, பணிக்கர் லேன், பலாலி வீதி,
(மரக்காலை முன்) திருநெல்வேலி.
Tel : 4591871, www.speeditnet.com

Speed Classes Starting on
12, 13, 14 th November.
Register Befor 11.11.2006.

## துயர் பகிர்கின்றோம்



### லயன் S.இராமகிருஸ்ணன்

(இளைப்பாறிய பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை)

உத்தமனார் வேண்டும் அந்த
உள்ளக் கமலம் அதை
உத்தமமாய்ப் பெற்றுயர்ந்த
நல்லூர் அரிமாக் கழக அங்கத்தவராய்
தலைவராய் பிராந்தியத் தலைவராய்
வடமாகாண அரிமாக் கழக
புற்றுநோய் நிதியத்தின் ஸ்தாபகராய்
சீர்மிகு சேவைகள் பல புரிந்த
சீரான இராமகிருஷ்ணா!
தங்களது சிறந்த நண்பனும்
எமது கழக சிரேஷ்ட உறுப்பினருமான
லயன் துரையை இழந்து ஒருவருட காலத்துள்
தங்களையும் இழந்து பரிதவித்து நிற்கின்றது
எங்கள் நல்லூர் அரிமாக் கழகம்
யாரோடு நோவோம் ஐயகோ!
யார்க்கு எடுத்துரைப்போம்!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

(55080) நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.

---

## வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில் 35 வருடங்களை 01.11.2006 இல் நிறைவு செய்யும் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

### திரு.க.தணிகாசலம் (SLTS-I)

(அதிபர், யா/புதுமடம் றோ.க.த.பாடசாலை)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(55083)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள்,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.

## 1st in COM., G.A.Q.

பேராதனை,யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- ★ A/L இல் கலை,வர்த்தகம்,விஞ்ஞானம்,கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்கள் ஆகும்.
- ★ புதிய பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
- ★ பேராதனை பல்கலைக்கழகத்திற்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (55008)

நிர்வாகி
S.அருள் நங்கை.

## எட்டாம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு 19 ★ 04 ★1920
உதிர்வு 10★ 11 ★1998

அமரர்
### சிற்பகலாஜோதி செல்லையா கந்தசாமி

திதி: 12.11.2006

எம்மை விட்டுப் பிரிந்து
எட்டு ஆண்டுகள்
ஆகிவிட்ட பொழுதிலும்
உம் நினைவலைகள்
எம்மனதில்
என்றும் நிலைத்து நிற்கும்.
உமது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

காளிகோயிலடி,
திருநெல்வேலி.
(55078)

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு இரண்டு



மண் மகிழ 07 ★ 09 ★1956
கண் நெகிழ 02 ★ 11 ★2004

அமரர்
### மயில்வாகனம் பத்மநாதபிள்ளை

(பப்பா)
(அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்க பார ஊர்திச் சாரதி)

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை உன் உருவம்
அழியாத கோலமாய் என் உள்ளமதில் வாழ்பவரே!
என் ஜீவன் உள்ளவரை அழியாது உன் நினைவு
நடமாடும் வீட்டில் படமாகிப் போன என் தெய்வமே!
நடமாடும் பிணமாக நான் நிலையின்றி தடுமாற
கல்லறையும் உமக்கு மகிழ்வுடனே இடம் தந்ததோ?
விண்ணுலகும் உன்னை விரைந்து வரவேற்றதோ?
பார்க்கும் இடமெல்லாம் உன் அன்பு முகம் நிழலாட
பரிதவிக்கும் பேதையில் மனம் ஒருகால் மகிழ்ந்தாட
அன்பே ஒருமுறை என்னருகில் வாராயோ?

ஏழாலை மத்தி,
ஏழாலை. (54887)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 04 - 1942



உதிர்வு 29 - 10 - 1999

### அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்

திதி.10.11.2006

கனவிலும் நான் காணாத காட்சி
காலன் உமை கவர்ந்திட்ட சூழ்ச்சி
கால மெல்லாம் கண்ணீர் விதியின் ஆட்சி
கடவுள் சந்நிதியில் ஏழு ஆண்டுகள் பூர்த்தி.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (55034)

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## கதிரவெளிக் கொடூரம் தொடர்பாக சர்வதேச சமூகம் கூறப் போவது என்ன?

இராணுவ நடவடிக்கைகளினால் தமது வீடு, வாசல்கள் மற்றும் உடைமைகளைத் துறந்து, இடம்பெயர்ந்து, வாகரை, கதிரவெளிப் பகுதியில் பாடசாலை ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த ஏதிலிகள், அரச படைகளின் கண்மூடித்தனமான கொடூர ஷெல், பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் உடல் சிதறிப் பலியாகியிருக்கின்றனர். பச்சிளம் சிசுக்கள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட ஐம்பதுக்கும் அதிகமானோரின் உயிர்களைக் குடித்து, நூற்றுக்கும் அதிகமானோரைப் படுகாயத்துக்குள் ஆழ்த்திய இக்கொடூரத்தால் தமிழர் தாயகம் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கின்றது. புலம் பெயர்ந்த தமிழர்கள் செய்வதறியாது திகைத்துப் போயிருக்கின்றார்கள்.

இந்த மோசமான செயலைப் புரிந்து விட்டு வெறும் துரதிஷ்டம் என்றும், அகதி மக்களைப் புலிகள் மனிதக் கேடயமாகப் பயன் படுத்தியமையால் வந்த வினை என்றும் சாக்குப் போக்குக் கூறித் தப்பிக்கொள்ள எத்தனிக்கின்றது தென்னிலங்கை அரசு.

இத்தகைய கொடூரத்தை - மனித குலத்துக்கு எதிரான நாசத்தை - புரிந்தமைக்காக இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் சட்டத்தின் கீழ் யாரும் விசாரணைக்கு முகம் கொடுக்கமாட்டார்கள்; யாரும் தண்டிக்கப்படமாட்டார்கள். ஏனென்றால், இத்தகைய கோரப் படுகொலைகளுக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் விசேட ஏற்பாடு இந்தத் தேசத்தின் சட்டப் புத்தகங்களில்தான் பொதிந்துள்ளன.

இத்தகைய கொத்துக் கொத்தான கோரப் படுகொலைகள், விடுதலைப் போராட்டத்தை எதிர்கொண்டிருக்கும் தமிழர் தாயகத்துக்கு ஒன்றும் புதியவையல்ல. அப்பாவி அகதிகளின் உயிர்களைப் பலி கொண்டு, பழிவாங்கும் போக்கு கடந்த இரண்டு தசாப்த காலமாக அரங்கேறும் கொடூரம்தான்.

தொண்ணூறுகளில் யாழ். நவாலியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த 170 இற்கும் அதிகமான ஏதிலிகளை ஒரே தடவையில் விமானக் குண்டு வீச்சு மூலம் கொன்றொழித்த இலங்கைப் படைகள், அப்படி ஒரு சம்பவமே நடக்கவேயில்லை என்று சாதித்து முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முற்பட்டமை நமக்குத் தெரிந்ததுதான்.

அப்போது, வெளித் தொடர்பின்றி, தகவல் தொடர்பு வசதிகளின்றி, யாழ். குடாநாடு அரச படைகளின் முழு முற்றுகைக்குள் சிக்கியிருந்ததால் விமானக் குண்டு வீச்சு மூலம் 170 பேர் வரை ஒரே கணத்தில் கொடூரமாகக் கொல்லப்பட்டமையைத் தென்னிலங்கையால் மூடி மறைக்க முடிந்தது. அப்படியிருந்தும் - காலம் பிந்தியேனும் - உண்மை கசிந்து, சிங்களத்தின் கொடூரம் அம்பலமாயிற்று.

ஆனால், இப்போது நவீன தகவல் தொடர்பு வசதிகள் முன்னேறியிருப்பதால் கதிரவெளிக் கொடூரத்தை மூடிமறைக்க முடியவில்லை. அல்லது இந்தப் படுகொலைகளுக்குக் காரணமான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களைப் புலிகளே நடத்தினார்கள் என்றோ அல்லது உயிரிழந்தவர்கள் அப்பாவி அகதிகள் அல்லர் விடுதலைப் புலிகளே என்றோ திரிப்பு வேலை செய்ய முடியவில்லை.

அதனால், சம்பவம் துரதிஷ்டமானது என்று கூறி ஒப்புக் கொள்ள வேண்டிய இக்கட்டு படைத் தரப்புக்கு.

சரி. இந்தக் கொடூரம் குறித்து சர்வதேச சமூகம் என்ன செய்யப்போகின்றது - என்ன சொல்லப்போகின்றது - என்பதே இன்றைய கேள்வியாகும்.

கிளிநொச்சி வைத்தியசாலை மீதான விமானக் குண்டு வீச்சில் ஐவர் உயிரிழந்தமை தொடர்பாக அச்செயலுக்குக் காரணமான அரசுத் தரப்பைக் கண்டிக்காமல் வெறும் கவலை வெளியிட்டமைபோல -

கதிரவெளியில் ஐம்பதுக்கும் அதிக அப்பாவி ஏதிலிகளின் உயிர்கள் காவு கொள்ளப்பட்ட கொடூரத்துக்கும் வெறும் கவலை தெரிவிப்பதோடு இணைத் தலைமை நாடுகள் அமைந்து விடுமா என்பதே தமிழர் தரப்பின் மனதைக் குடையும் வினாவாகும்.

''தமிழர் தாயகப் பூமியில் புலிகளின் படை நிலைகளுக்கு அப்பால் அப்பாவி மக்களின் குடியிருப்புகள் மீது இலங்கை அரசுப் படைகள் கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால் தென்னிலங்கையில் சகல இடங்களும் எமது தாக்குதலுக்கு இலக்காவது சட்ட ரீதியாக நியாயமானதாகும்.'' - என்று புலிகள் எச்சரித்துள்ள பின்னணியில் கிளிநொச்சி வைத்தியசாலை மீதான விமானக் குண்டு வீச்சு, கதிரவெளி அகதி முகாம் மீதான ஷெல் தாக்குதல்கள் போன்ற கொடூரங்கள் அரங்கேறியுள்ளமையைச் சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மோதல்கள், வலிந்த தாக்குதல் நடவடிக்கைகள், இராணுவ நடவடிக்கைகள் போன்றவற்றை இலங்கை அரசுத் தரப்பும், விடுதலைப் புலிகளும் மேற்கொள்வதைத் தவிர்த்து அமைதி முயற்சிகளில் இதய சுத்தியுடன் ஈடுபட வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வரும் சர்வதேச சமூகம், கதிரவெளித் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் அத்தகைய அமைதி முயற்சிகளுக்கு நிரந்தரமாக ஆப்பு வைக்கும் வேலை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கெப்பிற்றிக்கொல்லாவை, ஹபரணை, காலித் துறைமுகத் தாக்குதல்கள் தொடர்பாக விழுந்தடித்துக் கொண்டு கண்டனம் வெளியிட்டு, அதிர்ச்சி தெரிவித்த அதே வெளிப்பாட்டை கதிரவெளிக் கொடூரம் தொடர்பாகவும் சர்வதேச சமூகம் வெளிப்படுத்துமா என்பதைக் கண்டறியக் காத்திருக்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

''நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்'' - என்பார்கள்.

இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கையாளும் விடயத்தில் தான் நீதியாகச் செயற்படுவதை சர்வதேச சமூகம் நிரூபிக்க இது ஒரு வாய்ப்பான சந்தர்ப்பம்.

நீதியாகச் செயற்பட்டு, தனது நிலைப்பாட்டை நெறிமுறையாகப் பிரதிபலித்து, நியாயம் செய்யுமா சர்வதேச சமூகம்?

# தமிழர் பாதுகாப்பில் அரசுக்கு அக்கறை இல்லை

# வாகரைக் கொடூரம் அதை எடுத்துக்காட்டுகிறது

### ஐ.நா. செயலாளருக்கு மகஜர் மூலம் தமிழ்க் கூட்டமைப்பினர் விளக்கம்

கொழும்பு, நவ.10

இடம்பெயர்ந்து வாகரையில் தஞ்சமடைந்து வாழ்ந்து வந்த அகதிகள் பலர் இராணுவத்தினரின் எறிகணை வீச்சு, ரொக்கெட் தாக்குதல்களால் கொல்லப்பட்ட சம்பவம், தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு மீதோ, அகதிகள் நலன் மீதோ இலங்கை அரசுக்கு எவ்வித அக்கறையும் கிடையாது என்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டி உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், அகதிகளுக்கான ஐ.நாவின் ஆணையாளரிடம் கொழும்பில் வைத்து நேற்றுத் தாம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற மனிதப் படுகொலைகளிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்கின்ற அப்பாவி மக்களினது உயிரைப் பாதுகாப்பதற்கு ஐ.நா. முன்வர வேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டிருக் கிறது.

ஐ.நா. பொதுச் செயலாளருக்கு முகவரியிட்டு கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ.நாவின் ஆணை யாளர் ஊடாகக் கையளிக்கப்பட்ட இந்த மகஜரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் ஒப்பமிட்டுள்ளனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''கடந்த ஏப்பிரல் மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட இ[illegible] நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழ்ப் பேசும் மக்கள், திருமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கில் வெருகல் மற்றும் ஈச்சிலம்பற்றுப் பகுதிக ளிலிருந்தும், மூதூர் தெற்கிலிருந்தும் இடம்பெயர நேரிட்ட நிலைமையை நீங்கள் அறிவீர்கள். இப்படி உள்ளூரில் இடம்பயர்ந்தவர்களில் ஏறக்குறைய 41 ஆயிரம் தமிழ் சிவிலியன்கள் அருகிலுள்ள மட்டக் களப்பு மாவட்ட வாகரைப் பகுதியில் தஞ்சமடைந்து வாழ்ந்து வந்தனர். [illegible], வாகரைப் பகுதியில் இடம்பெயர்ந்த இந்த மக்கள் உட்பட நிரந்தரக் குடி மக்களும் சேர்ந்து மொத்தம் 61 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து இங்கு அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களில் நூற்றுக் கணக்கானோர் கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். கடந்த 8-11-2006 ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள், பல்குழல் ரொக்கெட் தாக்குதல்கள் காரணமாக 53 தமிழ்ச்சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் நால்வர் பச்சிளம் குழந்தைகள். ஆறு பேர் சிறுவர்கள். 12 பேர் பெண்கள். கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாக 127 அப்பாவி மக்கள் படுகாய மடைந்துள்ளனர். காயமடைந்த 20 பெண்கள், 10 சிறுவர்கள், 7 பச்சிளம் குழந்தைகள் உட்பட 67 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள்.

இலங்கை இராணுவத்தினரின் இந்த ஆட்லறி எறிகணைத் தாக்குதல் காரணமாக பாடசாலைக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் பள்ளிக்கூடச் சூழலிலுள்ள 117 பொது மக்களின் வீடுகளும் சேதத்திற்குள்ளாகி இருக்கின்றன. இவை யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கும் முரணான செயல்களாகும். அகதிகள் உட்பட தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்புக் குறித்து இலங்கை அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை இந்தச் செயல்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

எனவே, இது விடயத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களினதும், இதர குடி மக்களினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு வேண்டிய உகந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு இதனால் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இதேவேளை, இதுபோன்ற தாக்குதல்கள் இனியும் இடம்பெறாது பார்த்துக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுத்து, இலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப் பேசும் மக்களினது உயிர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசையும் இதனால் கேட்டுக் கொள்கிறோம்.'' - என்று உள்ளது.

## கல்லுண்டாய் வீதி மூடப்பட்டதால் மக்களுக்குப் போக்குவரத்துச் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணத்தையும் காரைநகரையும் தொடுக்கும் கல்லுண்டாய் வீதி கடந்த இரண்டு நாள்களாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு மூடப்பட்டுள்ளது. இ.போ.ச. பஸ் சேவைகள் உட்பட வாகனங்கள் எதிலும் மக்கள் பயணம் செய்ய முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்கும், அங்கிருந்து நகருக்கும் பயணம் செய்யும் பொது மக்கள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் இந்த வீதித் தடையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சங்கரத்தை - நவாலி ஊடாகவோ அல்லது மானிப்பாய் சுழிபுரம் ஊடாகவோ மக்கள் நீண்ட தூரம் பயணம் செய்ய நேர்ந்துள்ளது.

இ.போ. சபையின் 785 மற்றும் 789 ஆம் இலக்கப் பாதைகளில் நடைபெறும் பஸ்சேவைகள் முறையே மடத்தடி வரையும், அராலி அம்மன் கோவில் வரையும் வந்து பின்னர் திரும்பிச் சென்று சங்கரத்தை நவாலியூடாக (786 ஆம் இலக்க பாதையூடாகவே) யாழ். நகரை வந்தடைகின்றன. இதனால் பயணிகள் நீண்ட நேரம் பயணம் செய்யும் கஷ்டநிலை தோன்றி உள்ளது.

இதே வேளை, நாவாந்துறை தொடக்கம் அராலிப் பாலம் வரையும் கடற்கரை ஓரமாகப் பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

## சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

அரச அலுவலர்களுக்கான அடிப்படை சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகள் நாளை சனிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார். நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் நடைபெற்று வந்த இந்த வகுப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-75)

## பதிவு செய்தோருக்கான மருந்துகள் வந்தன

கொழும்பில் இருந்து மருந்துகள் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் பதிவு செய்து பணத்தைச் செலுத்தியவர்களுக்கான மருந்துகள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றினை உடனடியாக தமது பணிமனைக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## சாதாரணதர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள்

### வடமராட்சி, தென்மராட்சியில்

யாழ்ப்பாணம், நவ.10

ஜி.சீ.ஈ. (சாதாரண) தர மாணவர்களுக்கான தமிழ் மாணவர் ஒன்றியம் நடத்திவரும் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நாளையும் நாளை மறுதினமும் வடமராட்சி, தென்மராட்சியில் நடத்த ஏற்பாடாகி இருந்தது.

வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை கணித பாடக் கருத்தரங்கும் மறுதினம் விஞ்ஞான பாடக்கருத்தரங்கும் இடம் பெறும்.

தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை விஞ்ஞான பாடத்துக்கும் மறுநாள் கணித பாடத்துக்குமான கருத்தரங்குகள் இடம் பெறும். இந்தக் கருத்தரங்குகள் காலை 9 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# படுகொலைகளை நடத்தியும் பட்டினியை உருவாக்கியும் சமாதானத்துக்கான நிலையை அரசு பின்தள்ளுகிறது

### அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம்

கொழும்பு, நவ.10

போர்க் காலப் படுகொலைகளாலும் பட்டினியாலும் மக்கள் உயிருக்காய் போராடிக் கொண்டிருக்கும் நிலையை வடக்கு - கிழக்கில் உருவாக்கி, நாட்டின் சமாதானம் ஏற்படக்கூடிய நிலையை அரசு பின்தள்ளுகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமீபகாலத்தில் இந் நாட்டில் அப்பாவி மக்கள் கண்மூடித்தனமாக படுகொலை செய்யப்படுவதை ஆழ்ந்த வேதனையுடன் கண்டிக்கிறோம். தாக்குதல்களுக்கு மறு தாக்குதலாக இராணுவ நடவடிக்கை என்ற சாட்டில் பொது மக்கள் உண்மை நிலையை அறியமுடியாத இருட்டடிப்புடன் பல அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாக்கப்படுகின்றன.

''இனவாதமின்றி நடக்கிறோம் எல்லோரும் இந்நாட்டுப் பிரஜைகள்'' என்று வெறும் வார்த்தைகளில் சொல்லாமல், அதனை அரசாங்கம் நடைமுறையில் காட்ட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பல அப்பாவி மக்களின் உயிர்கள் அதுவும் மட்டக்களப்பு கதிரவெளிப் பாடசாலையில் தங்கியிருந்த அகதிகள் மீது படையினர் புதன்கிழமை [illegible] ஆட்டிலறி ஷெல் தாக்குதலில் [illegible]ந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் அறுபது பேர் கண்மூடித்தனமாக படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டை போக்குவதற்கு, மனிதாபிமான முறையில் நடவடிக்கை எடுக்காமல் இராணுவ ஆட்சிப் போக்கில் மக்களை வதைத்துக் கொண்டிருக்கிறது.

இந்நாட்டு மக்களாகத் தங்களை கருதும் மனப்பான்மையின்றி வடகீழ் மாகாணத் தமிழ் மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பங்கு கொள்ளவில்லை. இன்றைய அரசின் நடவடிக்கை அதனை நியாயப்படுத்துவதுடன், வடகீழ் மாகாண மக்களைப் புறக்கணித்து மேலும் அவர்களின் அதே மனப்பாங்கை வளர்ப்பது எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

இந்நாட்டில் இன்று துயர் அனுபவிக்கும் தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் இந்து மக்கள். இந்தியாவும், பாரெல்லாம் பரந்திருக்கும் இந்து ஆதீனங்களும், அமைப்புகளும் எமது மக்களுக்கு இன்று கைகொடுத்து உதவ வேண்டும். இன்றைய அபாயகர நிலையிலிருந்து அவர்களை காப்பாற்ற வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (அ)

**நாளை**

ஐப்பசி 25
சனிக்கிழமை
11.11.2006
திதி : ஷஷ்டி சித்தம்
பிற்பகல் : 01.49
நட்சத்திரம் : புனர்பூசம்
காலை : 07.37
சுபநேரம் : 03.06 - 04.36
ராகுகாலம் : 09.06 - 10.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்புக்குழுவினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசினார்.

அதன் பின்னர் நோர்வே ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

நோர்வேயின் முன்னாள் இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் லாரா ஜான் ஸோல்பேர்க் தற்பொழுது இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவராகப் பணிபுரிகின்றார்.

''சம்பந்தப்பட்ட இடத்துக்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் வந்து சேர்ந்த பின்னரே தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு, மெல்ல மெல்ல அவரது அணியை நோக்கி அதுதிருப்பப்பட்டிருக்கின்றது. இத்தகைய மிக மோசமான தாக்குதலை- ஆத்திரமூட்டப்படாத நிலையிலேயே - இலங்கைப் படைகள் மேற்கொண்டிருக்கின்றன.'' - என்று நோர்வே ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார் சொல்ஹெய்ம்.

''அது ஒரு மிக ஆபத்தான நிலைவரம்'' - என்று விவரித்தார் சொல்ஹெய்ம்.

''அது மிகத் தெளிவாக - துல்லியமாகத் தெரியும் பிரதேசம். ஆகவே, தவறாகப் புரிந்துகொள்ளல் என்ற பிரச்சினைக்கே அங்கு இடமில்லை'' - என்றார் அவர்.

சேதமடைந்துள்ள அந்தப் பாதைத் தளத்தை ஆராய்வதற்கு இக்குழு அங்கு செல்லும் என்பது குறித்து இராணுவத்துக்கு முற்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது.

முதலில் இலங்கை இராணுவத்தின் ஷெல்கள் நூறு மீற்றர் வித்தியாசத்தில் நிலத்தில் வீழ்ந்தன. பின்னர் அது மேற்படி குழுவினர் நின்ற பிரதேசத்தை நோக்கி நகர்த்தப்பட்டது. கண்காணிப்புக்குழுத் தலைவரின் இடத்திலிருந்து ஐம்பது மீற்றர் தொலைவுவரை ஷெல்கள் வீழ்ந்துள்ளன என்று நோர்வே ஊடகம் தெரிவித்தது.

அந்தப் பீரங்கி ஷெல் ஒன்று வெடித்ததில் எழுந்த அதிர்ச்சி அலையால் குழுவினரின் வாகனங்களுள் ஒன்று பாதையை விட்டுத் தடம் புரண்டது என்றும் நோர்வே. ஊடகம்தெரிவித்தது.

நோர்வேயின் மேஜர் ஜெனரல் ஸோல்பேர்க்கின் (வயது-54) அனுபவத்தை விபரித்த சொல்ஹெய்ம், ''வழமையாக அமைதியாகவும் பொறுமையாகவும் காணப்படும் அவர் இந்தப் பீரங்கித் தாக்குதலில் தனது உயிர் போய்விடும் என அஞ்சும் நிலைமை ஏற்பட்டது'' என்றார்.

கண்காணிப்புக் குழுவின் வயதில் குறைந்த உறுப்பினரான போல் எரிக் பிஜேர்க் (வயது-34) என்பவரும் அச்சமயம் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் அங்கு சென்றிருந்தார் எனக் கூறப்பட்டது.

# வடக்குக் கடலில் 2 டோறாக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முதலாவது மோதல் பருத்தித்துறை முனைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது. அதில் கடற்படை டோறா ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

அதேகடற்புலிகளின் அணி மேலும் முன்னேறி வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் வைத்து மாலை 6 மணியளவில் அரச கடற்படையின் மற்றொரு தாக்குதல் படகைத் தாக்கி சேதப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

அதன் பின்னரும் அப்பகுதியில் கடற்சண்டை தொடர்ந்தபோதிலும் இரவு 7 மணியளவில் அது ஓய்வுக்கு வந்தது.

மாலை 5 மணிமுதல் இரவு 7 மணி வரை அப்பகுதியில் நேரடிக் கடற்சமர் இடம்பெற்றபோது கடற்படைக்கு உதவியாக ஹெலிக்கொப்டர்களும், கிபிர் ஜெட் குண்டுவீச்சு விமானங்களும் மாறிமாறி புலிகளின் படகுகள் அணிமீது தாக்குதல்கள் நடத்தின என்றும் கூறப்பட்டது.

பெரும் எண்ணிக்கையிலான படகுகளில் வந்த கடற்புலிகளின் அணிக்குத் தாங்கள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், ஆகக்குறைந்தது கடற்புலிகளின் 14 படகுகள், அதிலிருந்த புலிகளுடன் மூழ்கடிக்கப்பட்டன என்றும் இலங்கை அரச பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தமது கட்டுப்பாட்டிலுள்ள நாகர்கோவில் கடற்பகுதியில் வைத்து தங்களது கடற்புலிகளை ஆத்திரமூட்டும் வகையில் அரச கடற்படை செயற்பட்டதையடுத்தே இந்த மோதல் வெடித்தது என புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார்.

ஆனால், திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த 'கிறீன் ஓஷன்' கப்பலுக்கு பாதுகாப்பாக வந்த கடற்படை அணி மீதே கடற்புலிகள் தாக்குதல் தொடுத்தனர் என்றும் -

அதனால் அந்தப் பயணிகள் கப்பல் தான் கடற்புலிகளின் தாக்குதல் இலக்காக இருக்கலாம் எனத் தாங்கள் கருதுகின்றார்கள் என்றும் - அரச பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

''முதலாவது டோறா மீது தாக்குதல் நடந்த சமயம், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் கப்பல் பருத்தித்துறையை நெருங்கியிருந்தது. கடற்சமர் வெடித்ததும் அக்கப்பல் ஆழ்கடலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. சமர் ஓய்ந்த பின்னர் அக்கப்பல் பாதுகாப்பாக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

''பத்துக்கு மேற்பட்ட கடற்படையினர் இந்தத் தாக்குதலில் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி நடக்கின்றது. அந்தத் தாக்குதலில் பலர் தப்பிப் பிழைத்திருக்கின்றனர் என அறிகின்றோம். அதனால் - தேடுதல் நடவடிக்கை தொடர்வதால் - எத்தனை பேர் காணாமற் போயுள்ளனர் என்பதை இப்போது கூற முடியாதுள்ளது.'' - என்று பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

**அரச தரப்புத் தகவல்**

இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் நேற்றிரவு விடுத்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு -

308 பயணிகளுடன் சென்ற வாடகைக்கு அமர்த்தப்பட்ட - சிவில் கப்பலான 'கிறீன் ஓஷன்' கலம் நேற்று மாலை 5.30 மணிக்கு புலிகளின் தாக்குதலை சந்திக்க நேர்ந்தது.

கடற்புலிகளின் முயற்சியை பருத்தித்துறைக்கு வடகிழக்கே 4 கடல் மைல் தொலைவில் வைத்து கடற்படையினர் தலையிட்டுத்தடுத்து அவர்களுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி, அவர்களை அங்கிருந்து பின்வாங்கச் செய்தனர்.

சில தற்கொலைத் தாக்குதல் படகுகள் உட்பட புலிகளின் 18 படகுகள் சிவில் பயணிகள் கப்பலைத் தாக்க முயற்சித்ததால் ஆத்திரமுற்ற தாங்கள் பதிலடி கொடுத்து புலிகளின் எட்டுப் படகுகளை முற்றாக நாசமாக்கினர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

புலிகளை விரட்ட விமானப் படையின் எம்.ஐ. 24 ரக ஹெலிகள், கிபீர்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. விமானப் படைத் தகவலின்படி 18 படகுகளைக் கொண்ட புலிகளின் அணியில் பெரும்பாலான படகுகள் அழிக்கப்பட ஆக நான்கு படகுகள் மட்டுமே சாலை பகுதிக்குள் தப்பிச்சென்றன.

தாக்குதலில் ஈடுபட்ட கடற்புலிகளை, கடற்படையினர் வெற்றிகரமாகத் துரத்தி அடித்துள்ளனர்.

யாழ்.தமிழ் மக்களின் உயிர்களையும் அவர்களின் நலன்களையும் உதாசீனம் செய்யும் புலிகளின் நடவடிக்கையின் மற்றொரு அங்கம் இது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புலிகள் தரப்புத் தகவல்**

இந்தத் தாக்குதல் குறித்து புலிகள் நேற்றிரவு தெரிவித்தவையாவது:-

எமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட நாகர்கோவில் கடற்பரப்பில் கடற்புலிகள் வழமையான பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் அவர்களின் மீது தாக்குதல் நடத்த கடற்படை முயன்றது. அதனால் கடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்குப் பாதுகாப்பாக இருந்த கடற்புலி அணிகள், அரச கடற்படை மீது தாக்குதல் நடத்த வேண்டியதாயிற்று.

மாலை 5.35 மணிக்கு ஒரு கடற்படை டோறா அழிக்கப்பட்டது. அதன் பின்னர் மற்றொரு கடற்படை டோறா தாக்கப்பட்டது. அது மூழ்குவதற்கு முன்னர் அதிலிருந்த ஆயுதங்கள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

23 எம்.எம். கனரகப் பீரங்கி -01, பி.ஜே. இயந்திரத்துப்பாக்கிகள் - 05, தானியங்கி கிரனேட் லோஞ்சர் - 01, ஐம்பது கலிபர் துப்பாக்கிகள் - 04 மற்றும் சிறுரகத் துப்பாக்கிகள், பெருமளவு பீரங்கிக் குண்டுகள், வெடிமருந்துகள் என்பன எம்மால் கைப்பற்றப்பட்டன.

கடற்படையின் நான்கு மாலுமிகள் எம்மிடம் சிக்கியுள்ளனர். தவிரவும் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலமும் எம்வசம் உள்ளது. அதனை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அரசிடம் ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது தாக்குதலுக்கு உள்ளான மற்றொரு கடற்படைப் படகு சேதங்களுடன் தப்பிச் சென்றுள்ளது.

தமிழர் தேசத்தின் கடல் இறைமையைக் காக்கும் இந்தப் போரில் நான்கு பெண் போராளிகள் உட்பட ஐந்து போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். - இவ்வாறு புலிகள் தெரிவித்தனர்.

(உ-1-15-115-155)

# கிழக்கில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

மட்டக்களப்பு, நவ.10

கதிரவெளியில் பொதுமக்கள் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

கறுப்பு, வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு, கதவடைப்புச் செய்து எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு பொது மக்களிடம் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

அதேவேளை-

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் வன்னியிலும் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

(அ-1)

# கொழும்பில் ஐ.நா தூதரகத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்கள் கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து இத்தகைய தாக்குதல்களை நடத்தினால் அரசு பாரிய விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

இத்தாக்குதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக்கோரி - இத்தாக்குதல் நடவடிக்கையை விளக்கி - கூட்டமைப்பு எம்.பிக்கள் அந்நிறுவனங்களுக்கு தனித்தனியாக மகஜர்களையும் நேற்று கையளித்துள்ளனர்.

''அன்று செம்மணி; நேற்று கிளிநொச்சி; இன்று வாகரை; நாளை....?'', ''ஐக்கிய நாடுகள் சபை ஏன் மௌனமாக இருக்கின்றது?'', ''உலகம் என்ன ஊமையா?'', ''தமிழர் என்ன சவப்பெட்டியா?'', ''அரசே! வாகரை மக்களை வதைக்காதே! சர்வதேசமே கண்டும் காணாமலும் இராதே!'', ''சர்வதேச சமூகமே! இலங்கை அரசின் கொடுமையைத் தடு!'', ''பட்டினியால் வாடும் வாகரை மக்களுக்கு பரிசு குண்டா?'', ''சர்வதேசமே கண்திறந்து பார்''- போன்ற வாசகங்களைத் தாங்கிய சுலோகங்களை கூட்டமைப்பு எம்.பிக்கள் ஏந்தி நின்றனர்.

இலங்கை அரசைக் கண்டித்தும், சர்வதேச நாடுகள் இலங்கை அரசின் தாக்குதலை நிறுத்தும் வண்ணம் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் எனக் கோரியும் கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர்.

(உ-07)

# ஐயகோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓலம் எழுந்திருக்கின்றது.

தமிழ் அகதிகள் தங்கியிருந்த பள்ளிக்கூடம்மீது நடத்தப்பட்ட இந்தக் குண்டு வீச்சில் பலர் பலியாகி இருக்கின்றமை பற்றிய செய்தி எனது காதுகளைத் துளைத்து கண்ணீரில் என்னை மூழ்கடித்திருக்கின்றது.

நேற்றைய (புதன்) தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினர், இலங்கைப் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு உதவியாக வந்துள்ள நோர்வே நாட்டுக் குழுவினர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள் என்ற செய்தியைக் கேள்விப்படும்போது, இந்திய நாடு இன்னும் எவ்வளவுக்கு பொறுமை காத்திடப்போகின்றது என்ற நியாயமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய மறுசிந்தனைக்குரிய நேரம் வந்துவிட்டது என்பதை இந்திய மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளேன் - என்று தெரிவித்துள்ளார்.

(உ)

# சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச் சார்ய சுவாமிகள், யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம், அங்கிலிக்கன் திருச்சபை குரு முதல்வர் வணபிதா. நேசகுமார், மெதடிஸ்த திருச்சபை குரு முதல்வர் வண.எஸ். கதிர்காமர், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உட்பட இச்சந்திப்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் தற்சமயம் உருவாகியுள்ள நெருக்கடி நிலையை ஏ-9 பாதையை திறப்பதன் மூலமே நீக்க முடியும் என்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கூறினர்.

அதற்கு பாதையைத் திறக்கும் விவகாரம் தமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயம் என்றும் - அது அரசியல் முடிவுகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் என்றும் - படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பற்றாக்குறையை தீர்ப்பது, ஊரடங்குச் சட்டத்தை மேலும் தளர்த்துவது, கல்விச் செயற்பாடுகளை சுமுகமாக மேற்கொள்ளுதல், எரிபொருள் மற்றும் மின் விநியோகங்களை சீராக்குதல் ஆகியவற்றின் அவசியத்தை தூதுக்குழுவினர் எடுத்துக் கூறினர்.

இவை தொடர்பாக ஆராய்ந்து விரைவில் முடிவை அறிவிப்பதாக படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மடம் வீதிச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப சிப்பாய் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை அவர் மீது வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்றும்-

காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்.நீதவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார். (அ-1)

# பூநகரி-சங்குப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராஜா நேற்றுத் தெரிவித்தார்.

வாகரையில் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நேற்றுக் கொழும்பில் உள்ள ஐ.நா. சபையின் இலங்கைக்கான அலுவலகத்திற்கு முன்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாவை சேனாதிராஜாவிடம், ஏ-9 பாதைக்குப் பதிலாக பூநகரி ஊடான பாதையைத் திறக்க அரசு விருப்பம் தெரிவித்திருப்பது குறித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

''ஏ-9 பாதைக்குப் பதிலாக பூநகரி ஊடான பாதையைத் திறக்க அரசு விருப்பம் தெரிவித்திருப்பதானது சர்வதேசத்தை ஏமாற்ற அரசு மேற்கொள்ளும் ஒரு கபட நாடகமாகும்.

பூநகரிப் பாதை மக்கள் பணயத் திற்கு உகந்ததல்ல. அதிகளவில் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லவோ அல்லது பெரிய வாகனங்கள் செல்லவோ முடியாது.

பூநகரியில் இருந்து சங்குப்பிட்டி வரையான சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்குக் கடல் மார்க்கமாகப் படகுகள் மூலம் தான் செல்ல வேண்டும். பாரிய வாகனங்களையும் படகுகளில் ஏற்றித்தான் கொண்டு செல்ல வேண்டும். இது பாதுகாப்பான பயணமாக அமையாது.

ஆகவே, சர்வதேச நாடுகளை ஏமாற்றும் நோக்கில் நாடகமாடும் திட்டத்தைக் கைவிட்டு விட்டு உடனடியாக ஏ-9 பாதையைத் திறக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.'' - என்றார் மாவை சேனாதிராஜா எம்.பி. (த)


விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி யாழ்.
DAY CLASS
LOGIC
திரு. கமல்
புதிய பிரிவு
14.11.2006
7.30 mon, Tu, Thu

BRIGHTMAN
பௌதிகவியல்
PAPER CLASS
By:பார்த்தீபன்
ஆரம்பம்: 11.11.2006
Sat.10.30 a.m
SAT, SUN - 10.30 a.m

தமிழ்
PAPER CLASS
திரு. குழந்தை
ஆரம்பம்: 10.11.2006
வெள்ளி 3 p.m
யூனிவேர்சல்

BRIGHTMAN
A/L பொருளியல்
2008 சந்தைப் பொருளாதாரம்
By:சண்
ஆரம்பம்: 11.11.2006
Sat.1.00 p.m

N.C.A கல்வி நிலையம்
கணக்கீடு
திரு.N.சதீஸ்
B.B.A (Fm.spl)
A/L 2008
வங்கிக் கணக்கிணக்கக்கூற்று
Sat,Sun 10.45-11.45 a.m
A/L 2007 Day
கம்பனி
Tue, Thu 3 - 4 p.m.
தொங்கல் கணக்கு
Sat,Sun 9.15-10.45 a.m
தேவை: m.s office, corel draw தெரிந்த பெண் பிள்ளை உடன் தேவை. அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.
-நிர்வாகி.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org